முரசு 3

ஒலி 2

# தமிழ் முரசு

## TAMOUL MOURASSOU

மார்கழி 1984

### தமிழ் ஈழம் தவிர்க்க முடியாதது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முரசின் பார்வையில்

தமிழ் முரசு - 38

## இன்றைய உடனடித் தேவை இயக்கங்களிடையே புரிந்துணர்வு.

சிறீலங்கா அரசின் கொடுமைகள் நாக பாம்பின் நச்சுப் படமாய் படர்ந்து விரிந்து செல்கிறது. மக்கள் தமது சுவாசத்தின் அடுத்த மூச்சுப்பற்றிய நம்பிக்கைகூட அற்றவர்களாகிவிட்டனர். மரங்கள், செடிகள் கூட அச்சப்படுகின்ற பீதி மண்டிப் போன நிலை. இந்த இருளினுள்ளே ஒரு ஒளிக்கீற்று. இந்த அச்சம், பீதி எல்லாவற்றையும் அகற்றியவர்களாய், இலட்சியத்தின் உறுதியும், ஆக்கிரமிப்பைத் தகர்த்தெறியும் வேகமும், நெஞ்சில் ஈழத்தாகத்தையும் சுமந்துகொண்டு போராடும் எங்கள் ஈழ இளைஞர்கள். இவர்கள் இயக்கங்களால் வேறுபட்டவர்களாக இருக்கலாம். ஆனால் இலட்சியத்தில் அல்ல.

உணவை மறந்து, உறவுகளைத் துறந்து உன்னதமான ஒரு இலட்சியத்துக்கு உயிரை அர்ப்பணித்துப் போராட்டம் நடத்தும் இந்த இளைஞர்கள்தான் தமிழ் மக்களின் நம்பிக்கை நட்சத்திரங்கள். ஏகாதிபத்திய சக்திகள் இன்று ஈழப்போராட்டத்திற்கு ஆதரவாளர்களையே வெட்டிச் சாய்க்கும் அளவிற்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையிலே இந்த இளைஞர்களிடையே இருக்கும் சிறு பேதங்களை பெருநெருப்பாக்குவதற்கான சதிகளும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தெரிந்தோ தெரியாமலோ தாம் சார்ந்துள்ள இயக்கங்களைத் தவிர இதர இயக்கங்களைத் தாக்குவதை முக்கிய வேலையாகக் கொண்டுள்ள தோழர்கள் தாம் தமிழ் மக்களுக்கு இளைஞர் இயக்கங்களைப் பிரித்து வைப்பதன் மூலம் பெரும் துரோகம் செய்வதை புரிந்து கொள்ளாதவர்களாகவே இருக்கிறார்கள். இது வருந்தத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களின் நடவடிக்கைகள் குறித்து ஆரோக்கியமான விமர்சனங்களுக்கு நாம் தடை போடவில்லை. ஒவ்வொரு இயக்கமும் சுயவிமர்சனத்தை செய்பவையாக இருக்கவேண்டும் என்று விரும்புபவர்கள் நாம். ஆனால் கண்மூடித்தனமாக ஈழவிடுதலை இயக்கங்களை சாடுவதைக் கண்டிக்கிறோம். சகல பாதுகாப்புக்களுடனும் ஐரோப்பிய நகர்களில் இருந்து கொண்டு என்றும் உயிருடன் போராடும் ஒரு ஈழப் போராளியை, அவன் சார்ந்த இயக்கத்தை ஒரு என்றும், இன்னொரு என்றும் கொச்சைப்படுத்த எமக்கு என்ன தகுதி இருக்கிறது என்று தோழர்கள் சிந்திக்க வேண்டும்.

எல்லாவற்றையும் விட கவலைக்குரியது என்னவென்றால் சில தோழர்கள் இன்று எமது பொது எதிரிகளான சிறிலங்கா அரசையும், அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் காற்றில் பறக்க விட்டுவிட்டு சக இயக்கங்களை ஈழவிடுதலையின் எதிரிகள் என்று கண்மூடித்தனமாகக் கண்டிக்க ஆரம்பித்திருப்பதுதான். இது தவறு. தமிழ் மக்களுக்கு செய்யும் துரோகம். தோழர்களே, ஐரோப்பாவிலிருந்து இந்த நச்சுப்புகை எழுவதை நாம் தடுத்துக்கொள்வோம்.

நாம் சார்ந்துள்ள இயக்கங்களின் ஐக்கியத்தை நோக்கி நெருக்குவோம். அல்லது ஒரு இயக்கத்தைச் சார்ந்து ஐக்கியத்துக்கு அழுத்தம் செய்வோம். ஈழப் போராட்டத்திற்கெதிரான எதிர்ப்புரட்சிச் சக்திகளில் புதிய நெருப்பில் எங்கெங்கோ இருக்கின்ற நாடுகள் ஐக்கியப்படுகின்ற இந்தவேளையில் ஈழமண்ணில் இருக்கின்ற நாம் இணைவதில் என்ன சிரமம் இருக்கிறது. இக்கட்டான இந்த சூழ்நிலையில் இயக்கங்கள் இணைய வேண்டியது அவசியமாகவே இருக்கிறது. அவசரமாகவும் கூட. இயக்கங்கள் பரிந்துணர்வுடன் இல்லாவிட்டாலும் கூட குறைந்தபட்சம் புரிந்துணர்வுடனாவது செயற்படவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏகாதிபத்தியமே! எமது இரத்தத்துளிகள் ஒவ்வொன்றும் உமது எதிரிகளாய் படையெடுக்கும்

சர்வதேசப் பயங்கரவாதத்தின் தந்தையான ரேகனும் அவரது சகபாடிகளும் மீண்டும் அரசுக் கட்டிலுக்கு வந்துவிட்டார்கள். கோடிக் கணக்கான உலகமக்களின் உயிர்கள் மீண்டும் போர் அபாயத்தினுள் ஊசலாடப் போகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது கோரப்பற்களையும், நகங்களையும் கொண்டுள்ள ஏவுகணைகளையும், நியூக்கிளியர் ஆயுதங்களையும் காட்டி உலகில் இன்றோ நாளையோ உலகப்போரை ஆரம்பிக்கப் போவதாக மிரட்ட ஆரம்பித்துவிட்டது. தாங்கொணா நெருக்கடியில் தவிக்கும் ஏகாதிபத்தியம் தனது அந்திம நேரத்தை தவிர்ப்பதற்காக அவசர அவசரமாக முன்னெப்போதும் இல்லாதவகையில் சர்வதேச சோசலிச சக்திகளுக்கெதிராகவும், ஒடுக்கப்பட்ட மக்களின் உந்துசக்திகளான தேசவிடுதலை இயக்கங்களுக்கெதிராகவும் தனது சதிகளைக் கட்டவிழ்த்து விட்டு விட்டது.

இச்சதிகளின் விளைவுகள்தான் பூகோளத்தின் மேற்பரப்பெங்கும் இன்று சிதறிக்கிடக்கும் இரத்தத் துளிகளும் இறந்த உடல்களும். மத்தியகிழக்கு — இலத்தீன் அமெரிக்கா - இந்திய உபகண்டம் - ஆபிரிக்கா — இப்படி அங்கிங்கென்று இல்லாதபடி உலகெங்கும் இந்த சர்வதேசப் பயங்கரவாதிகளின் நீசகரங்கள் தங்கள் கோரக் கொலைகளை ஆரம்பித்து விட்டனர். இலெபனன்- ஒரு காலத்தில் மத்திய கிழக்கின் சுவிற்சலாந்து என்று பட்டம் சூட்டப்பட்டு மேற்கத்திய முதலாளித்துவத்தின் சுரண்டலுக்கு இரையாக்கப்பட்டு வந்த நாடு. இந்த நாட்டு இளைஞர் இயக்கங்கள் தேசிய உணர்வுடன் தங்கள் விடுதலைப் போரா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ட்டத்தை ஆரம்பித்தபோது அமெரிக்க ஏகாதிபத்தியம் தனது செல்லப் பிள்ளையான இஸ்ரேலின் துணையுடன் லெபனான் கொழுந்து எரிகிறது. விளைவு இன்று லெபனான் - சிதைந்த நகரங்கள், சிதறுண்ட உடல்கள் - தங்களது ஆயுளை நாட்களாக்கி நிச்சயித்துவிட்ட மக்கள் - என்று இந்நாட்டின் அன்றாட வாழ்க்கை அமெரிக்க ஏகாதிபத்தியச் சதியாளர்களால் அழிக்கப்பட்டுவிட்டது. தங்களைக் காத்துக் கொள்ள சொந்தமாக ஒரு இராணுவம் கூட இல்லாத சின்னஞ்சிறிய கிரெனாடாத் தீவைக் கைப்பற்றி ஆக்கிரமித்த சர்வதேசப் பயங்கரவாதி றேகனின் அரசு இன்று நிக்கராகுவாவின் எல்லைகளில் தனது கூலி எதிர்ப்புரட்சிப் படைகளையும், எல்லையிலிருந்து கூப்பிடு தூரத்தில் தனது படைகளையும் வைத்துக் கொண்டு இன்றோ நாளையோ நிக்கராகுவாவை ஆக்கிரமிக்கப் போவதான மிரட்டல்கள், இந்தியாவின் எல்லைகளுக்குள் பிரிவினைச் சக்திகளைத் தூண்டி இந்தியாவைத் துண்டாடும் ஈனக்காரியத்தைச் செய்வதற்கான தீராத முயற்சிகள் - இந்தியாவின் எல்லைப் புறத்திலுள்ள தனது கைப்பொம்மை ஆட்சியாளர்கள் மூலம் தொடர்ச்சியாக பாரதத்திற்கு ஆத்திரமூட்டி போருக்கு அழைக்கும் சதிகள் - சதிகளின் உச்சக்கட்டமாக சுட்டுக் கொல்லப்பட்ட பாரதப் பிரதமர் இந்திரா காந்தி - இத்துடன் அடங்கவில்லை றேகன் அன்ட் கோவின் கொலை வெறி.

இஸ்ரேலிய சியோனிச வெறியர்களுடன் மட்டுமன்றி தென்னாபிரிக்க கொடியவர்களுடன் "ஆக்கபூர்வமான ஒத்துழைப்பு", இந்த அச் சுவட்டில் மொஸாம்பிக், அங்கோலா நாடுகளின் முற்போக்கு அரசுகளை தென்னாபிரிக்க இனவெறியரசின் காலடியில் கொண்டுவருவதற்கான ஏகாதிபத்தியச் சதியாளர்களின் திட்டமிட்ட எதிர்ப்புரட்சிச் சதிகள், பொருளாதாரத் தடைகள், எத்தியோப்பியாவிலும் இதர ஆபிரிக்க நாடுகளிலும் இன்று நிரந்தரப் பசிப் பஞ்சத்திற்கு பலியாகி இறந்து கிடக்கும் ஆபிரிக்க மக்கள் தொகு பசிக்கு உணவு கேட்டபோது அவர்கள் சோவியத்துக்கே சார்பான அரசுகளின் நேசர்கள் என்று கூறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவு உதவிகளை நிறுத்தி இன்று லட்சக்கணக்கான ஆபிரிக்க மக்களின் உயிர்ப்பறிப்புக்கு காரணமான ரேகனும் அவனது கும்பலும் உலகின் ஒவ்வொரு மூலையிலும் நிகழ்த்தி வரும் சதிகள் சாதாரணமானவையா?

இந்தச் சதியாளர்கள் நேற்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை நிர்வாணப்படுத்தி லெபனானிலிருந்து அகற்றிவிரட்டிய இந்தக் கொலைக்கும்பல் இன்று ஆபிரிக்க தேசிய காங்கிரஸாயிருந்தாலென்ன சுவாபோவின் இடதுசாரிப் போராளிகளது போராட்டமாயிருந்தாலென்ன அல்லது இங்கிலாந்தின் சுரங்கத் தொழிலாளர்களது போராட்டமாயிருந்தாலென்ன நசுக்கியே தீருவதென்று சத்தியம் செய்திருக்கிறது. எங்கெல்லாம் இரத்தம் சிந்தப்படுகிறதோ அல்லது அவலக்குரல் எழுகிறதோ அங்கெல்லாம் இந்த அமெரிக்க ஏகாதிபத்தியச் சதிக்கும்பல் ஈடுபட்டுள்ளது.

இத்தகைய 'சர்வ வல்லமை' படைத்த ஏகாதிபத்தியச் சதியாளர்களை தமது எதிரிகளாக பகிரங்கமாகவே அறிவித்து ஈழப்போராட்டத்தைச் சூழ்ந்திருந்த கட்டுக்களைத் தகர்த்து ஏகாதிபத்தியத்துக்கெதிரான போராட்டமாக முன்னெடுத்துள்ள ஈழ விடுதலை இயக்கங்கள் இல்லையெனில் உண்மையில் என்றோ இலங்கை இன்னுமொரு பிலிப்பைன்சாக, பாகிஸ்தானாக அமெரிக்கத் தளத்தைக் கொண்டதாக மாறியிருக்கும். ஆனால் ஏகாதிபத்தியத்துக்கெதிரான ஈழமக்களின் போராட்டத்தின் வேகம் அதிகரிக்கப்படவேண்டும். போர் மேலும் உக்கிரத்தன்மை பெறவேண்டும்.

அமெரிக்கச் சதிக்கும்பல் நாளொருவண்ணம் பொழுதொரு வண்ணமாக கோடிக்கணக்கான டொலர்களைத் தீனியாகப் போட்டு தேசிய விடுதலை இயக்கங்களுக்கெதிரான பயங்கரவாதத்தை வளர்த்துக் கொண்டு போகையிலே, அமெரிக்க காங்கிரஸின் உத்தரவுகளையும் மீறி சி.ஐ.ஏ. தனது சதிவேலைகளை ஐந்துமடங்காக அதிகரித்து விட்டிருக்கும் இந்த வேளையிலே, 'விரும்பத் தகாத சக்திகள்' என்று பட்டம் சூட்டப்பட்டு புரட்சிகர அரசாங்கங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்ப்புரட்சிச் சதிகளால் சூழப்பட்டு முற்போக்குத் தலைவர்கள் கொன்று நரபலி வேட்டையாடப்பட்டு, தமது சர்வதேசப் பயங்கரவாதத்தை மூடிமறைக்க, 'இடதுசாரிப் பயங்கரவாத அபாயம்' பற்றி கதைகள் புனையப்பட்டு தினந்தோறும் முதலாளித்துவப் பிரச்சாரச் சாதனங்கள் பொய்களை திரட்டி வெளியீடு செய்கின்ற அவலம் ஒரு புறம்.

மறுபுறத்தில் அடக்குமுறை வித்தைகளை தமது போதகர்களிடம் கற்றுக் கொள்வதற்காக சர்வதேசப் பயங்கரவாதத்தின் தலைநகரான வாஷிங்டனுக்கு யாத்திரைகளை மேற்கொள்ளும் அடக்குமுறை ஆட்சியாளர்களும், இராணுவக் கொடுங்கோலர்களும், முதலாளித்துவக் கைப் பொம்மைகளும் பைகள் நிறைய டொலர்களையும் கைகள் நிறைய நவீன ஆயுதங்களையும் கொண்டுவரும் காட்சி...

அனைத்தும் சேர்ந்து ஏகாதிபத்தியத்தின் சர்வவல்லமையை மீண்டும் மீண்டும் எடுத்துக்காட்டி எம்மை எச்சரிக்கின்றன. இந்தச் சதிகள் தினமும் ஈழ மக்களை ஏகாதிபத்தியத்துக்கு எதிராக கிளர்ந்தெழுங்கள்... எழுங்கள் என்று கட்டியம் கூறுகிறது. சக்திவாய்ந்த இந்தச் சதியாளர்களின் திட்டங்கள் எங்கள் பாசபூமியில் படர்வதற்கு முன்னர் வெட்டியெறியப் படுவதற்கு சக்தி சேர்க்கப்பட வேண்டும். ஏகாதிபத்தியத்தின் சதிகள் தொடர்ச்சியாக, சோர்வின்றி எம்மக்களிடையே அம்பலப் படுத்தப்பட்டு எதிர்ப்போரில் அனைத்து மக்களும் அணிவகுக்கப்பட வேண்டும். இதற்கு முன்னேறும் ஈழவிடுதலை இயக்கங்கள் ஏகாதிபத்தியத்துக்கெதிரான போரில் தாமும் இணைந்து உலக விடுதலை இயக்கங்களுடனும், சர்வதேச சோஷலிச சக்திகளுடனும் இணைக்கப்பட வேண்டும்.

'எமது ஒவ்வொரு இரத்தத்துளிகளும் ஏகாதிபத்திய வெறிநாயே உனது எதிரிகளே!' என ஈழமக்களாகிய நாம் உறுதியெடுத்துக் கொள்வோம். ஏகாதிபத்தியத்துக்கெதிரான போரை இணைந்து முன்னெடுப்போம்! வென்று கொள்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கி அரக்கனும் மனிதனின் விதியும்

நாளைய கனவுகள் இன்று கலைந்தன
நேற்றைய உணர்வுகள் இன்று சிதைந்தன
காக்கி உடையின்
துப்பாக்கி அரக்கர்
தாண்டவமாடினர்
ஒரு பெரும் நகரம் மரணம் அடைந்தது

வாழ்க்கையின் முடிவே மரணமென்பீராம்
ஆயின் எமக்கோ
மரணமே எமது வாழ்வாய் உள்ளது
திருவிழாக் காணச் சென்று கொண்டிருக்கையில்
படம் பார்க்கச் செல்லும் பாதிவழியில்
பஸ் நிலையத்தில் வரிசையில் நிற்கையில்
சந்தையிலிருந்து திரும்பி வருகையில்
எங்களில் யாரும்
சுடப்பட்டிருக்கலாம்
எங்களில் யாரும்
அடிபட்டு விழலாம்

உத்தரவாதம் அற்ற வாழ்க்கையே
மனிதனின் விதியா?
அடக்குமுறைக்கு அடிபணிவதே
அரசியல் அறமா?
அதை நாம் எதிர்ப்போம்
அதை நாம் எதிர்ப்போம்

தனி நாடு அல்ல எங்களின் தேவை
மனிதனுக்கான வாழ்க்கை உரிமை
மனிதனுக்குரிய கௌரவம்
வாழ்க்கைக்கான உத்தரவாதம்
யார் இதை எமக்கு மறுத்தல் கூடும்
மறுப்பவர் யாரும் எம் எதிர் வருக
காக்கி உடையில் துப்பாக்கி அரக்கர்
தாண்டவமாடுக!

போராடுவதே மனிதனின் விதியெனில்
போராட்டத்தில்
மரணமடைவதும் மகத்துவம் உடையதே.

— எம். ஏ. நுஃமான் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழ தமிழக சிறீலங்கா செய்திகள்

## தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தாக்குதலில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தகர்ந்தது! பெருந்தொகை ஆக்கிரமிப்புப் படைகள் பலி!

20.11.84 அன்று பிற்பகல் 3 மணியளவில் சீருடை அணிந்த 150 ஐ அண்மித்த தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் போராளிகள் இயந்திரத் துப்பாக்கிகள், வெடிகுண்டுகள் சகிதம் மேற்கொண்ட தாக்குதலில் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் தகர்க்கப்பட்டு ஆக்கிரமிப்பு அரசின் விசேட கொமாண்டோ பிரிவைச் சேர்ந்த 50 ஐ அண்மித்த பொலிசார் கொல்லப்பட்டனர். மிகுந்த கச்சிதமாக நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் பொலிசார் தப்பிவிடா வண்ணம் பொலிஸ் நிலையத்துக்கு வெளியே கண்ணிவெடிகளும் போராளிகளால் புதைக்கப்பட்டிருந்தன. இதே வேளையில் தாக்குதலுக்குள்ளான சகபாடிகளைக் காப்பாற்ற விரைந்த சிறீலங்கா இராணுவம் கைதடிக் கண்மையில் தமிழ் ஈழ விடுதலை இயக்க போராளிகளால் வழிமறிக்கப்பட்டு தாக்குதலுக்கு உள்ளாகினர். இதில் கவசவாகனங்கள் நாசப்படுத்தப்பட்டதுடன் இராணுவத் தரப்பில் பெருத்த உயிர்ச்சேதமும் ஏற்பட்டது. இரு தாக்குதலிலும் 130 ஐ அண்மித்த ஆக்கிரமிப்புப் படையினர் கொல்லப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. மேற்படி தாக்குதல் அரசபடைகளுக்கு பெரும் பீதியைக் கொடுத்திருப்பதுடன் வடக்கில் அரசபடைகள் முகாம்களுக்குள்ளேயே இருக்குமாறு உத்தரவிடப்பட்டிருக்கின்றன. இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொழும்பில் திம்பிரிகஸ்யாய, பொரளைப் பகுதிகளில் சில தமிழ் வர்த்தக நிலையங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. அதே வேளையில் அரசாங்கம் அடுத்த இருதினங்களையும் விடுமுறை தினங்களாக பிரகடனம் செய்து தொடர்ச்சியாக 48 மணிநேர ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்தது. தற்போது ஊரடங்கு உத்தரவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பாவித் தமிழ் இளைஞர்கள் தொடர்ந்து கைது!
## முகாம்களில் கடும் சித்திரவதை!

தேடுதல் வேட்டை என்ற போர்வையில், அப்பாவித் தமிழ் மக்களுக்கெதிரான இனவதை ஈழமெங்கும் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது. 8.11.84 அன்று யாழ் நகரில் ஏழு வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர். கண்டி தலதா மாளிகை அண்மையில் வைத்து தமிழ் பொறியியலாளர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். 17.11.84 அன்று மாங்குளத்தில் தேடுதல் வேட்டையின் போது இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏறாவூரில் அதிரடிப்படையினர் இருபெண்களைக் கைது செய்துள்ளனர். 1.11.84 அன்று புன்னாலைக் கட்டுவனில் இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கரையூரைச் சேர்ந்த கருணாரத்ன-சசிகலா எனும் சிங்கள தம்பதிகள் ஈழப்போராளிகளுடன் தொடர்புடையவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டு கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். 13.11.84 அன்று புளியங்குளத்தில் ஒருவர் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார். மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் வைத்து வண. சகோதரர் கிறெகரியன் கைதுசெய்யப்பட்டுள்ளார். அச்சுவேலியில் நடுத்தர வயதுடைய ஒரு பெண்மணி இராணுவத்தால் கொல்லப்பட்டு மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தார். 9.11.84 அன்று யாழ். நகரில் இராணுவம் நடத்திய வெறியாட்டம் 58 வயதுடைய ஒருவர் கொல்லப்பட்டார். பஸ் சாரதி செல்லத்துரை காயமடைந்து அவரது கைவிரல்கள் அகற்றப்பட்டுள்ளன. யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட மாணவி படுகாயமடைந்து மயக்க நிலையிலுள்ளார். காங்கேசன் துறை சீமெந்து ஆலைக்கு முன்னால் வைத்து நான்கு இளைஞர்கள் 20.11.84 அன்று கைதுசெய்யப்பட்டுள்ளனர். மன்னார் அடம்பனில் ஆயுதப்படையினர் நடத்திய வெறியாட்டம் 25 வயதுக்குட்பட்ட 4 இளைஞர்களைப் பலிவாங்கியுள்ளதுடன் பலரைக் காயப்படுத்தியுமுள்ளது. கதிர்காமம் யாத்திரிகர் விடுதியில் வைத்தும் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கிழக்கு மாகாணம் மற்றும் மலையகப் பகுதிகளில் ஏராளமான தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு இராணுவ முகாம்களில் கடும் சித்திரவதைக்கு உள்ளாகி வருகின்றனர். இவர்களது வாய்களுக்குள் பாம்புகளை விட்டும் இவர்கள் துப்பாக்கிகளால் கடுமையாகத் தாக்கப்பட்டும் துன்புறுத்தப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தேடுதல் வேட்டை' என்ற போர்வையில் ஈழமெங்கும் அரசபயங்கரவாதம்.

'தேடுதல் வேட்டை' என்ற பெயரில் சிறிலங்கா அரசபடைகள் ஈழத்தில் நடத்திவரும் அராஜகதாண்டவம் ஈழமக்களை பீதியில் ஆழ்த்தியுள்ளது. கொக்குவில் பூநாறிமடத்தடியில் ஒரு வீடு இராணுவத்தால் தீக்கிரையாக்கப்பட்டது. இடைக்காடு வளலாயில் 3.11.84 அன்று 30க்கும் மேற்பட்ட வீடுகள் அரசபடைகளால் தீயிடப்பட்டன. இச்சம்பவத்தின் போது 71 வயதுடைய ஆறுமுகம் வேலுப்பிள்ளை எனும் இளைப்பாறிய ஆசிரியரும் தீக்கிரையாகினர். கைதடி, நாவற்குழிப் பகுதியிலும் பெரும் தேடுதல் வேட்டைகள் மேற்கொள்ளப்பட்டன. நந்தாவிலில் தேடுதல் வேட்டையின் போது துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டு இளைஞர்கள் இம்சிக்கப்பட்டனர். ஊரெழுவில் 16 வீடுகளும் இடைக்காட்டில் 20 வீடுகளும் வளலாய்ப் பகுதியில் 38 வீடுகளும் ஆக்கிரமிப்புப் படையினரால் தீவைக்கப்பட்டன. கார்கள், வான்கள், மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் பலவும் தீக்கிரையாகின. ஆயுதப்படைகளின் இந்த அக்கிரம நடவடிக்கைகள் மக்களை மரணபயத்துக்கு உள்ளாக்கி இருக்கின்றன.

## இந்திரா மறைவு - ஈழமெங்கும் அஞ்சலி!

மறைந்த பாரதப் பிரதமருக்கு ஈழமக்கள் தமது இறுதி அஞ்சலியை மிகுந்த உருக்கமாக வெளிப்படுத்தினார். வீதிகள் தோறும் வாழைகள், உண்ணாவிரதம், பிரார்த்தனை, அஞ்சலிக் கூட்டங்கள் என்று மக்கள் ஒருமுகமாக தமது அஞ்சலியைச் செலுத்தினர். இயக்கங்கள் 68 [illegible] வெளியிட்டு அனைவருடனும் தமது அஞ்சலியைச் செலுத்தின. இந்திராவின் மறைவு வடக்கு, கிழக்கு, மலையகம் என ஈழத்தின் ஒவ்வொரு அங்குல மண்ணிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருந்தது. மக்கள் ஒவ்வொருவரும் தமது தாயை இழந்துவிட்டது போன்ற ஏங்கிய நிலையிலேயே காணப்பட்டனர். ஈழம் முழுவதும் இந்திராவின் உருவப்படச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழனுக்கு ஒரு கடிதம்

தோழா,

நாளைய உலகம் உழைக்கும் வர்க்கத்தின் ஆளுகையில் வராதா, என்று ஏக்கம் கொண்டிருக்கும் உன்போன்ற தோழர் கூட்டம் உலக அரங்கில் நிமிடத்துக்கு நிமிடம் எண்ணிக்கையினைப் பெருக்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலகட்டத்தில், முழுமையான பயிற்சியின் பின் மக்கள் மத்தியில் பணியாற்றப் புறப்பட்டிருக்கும் உன் முன்றிலையில், உலக ஏகாதிபத்தியத்தின் உச்சக்கட்ட நெருக்குவார காலப்பகுதியிலும் முதலாளித்துவ சமுதாயத்தினால் ஒதுக்கித்தள்ளப்பட்டிருக்கும் தொழிலாளர், விவசாய மக்கள் மத்தியில் சோசலிச, சமூக உணர்வுகள் ஊன்றப்படவேண்டியதன் அவசியத்தை வரலாறு உன்மீது சுமத்துகிறது.

உன்னையும் விஞ்சிய பணிகள் உனக்காகக் காத்திருக்கும் இவ்வேளையில், மனிதப் பிறவியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி வரும் இந்த சமுதாய அமைப்பை தகர்த்தெறிந்து - நிஜமான ஓர் சமதர்ம சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நாம் ஆற்ற வேண்டிய பணி பற்றி ஆங்காங்கே சிலவற்றை தொட்டுச் சொல்ல வருகிறேன்.

உலகமானது சோசலிசத்தின் வெற்றியை நோக்கி முனைப்புடன் விரைந்து கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் இதன் எதிரணியில் முதலாளித்துவமானது உளுத்து உள்ளொடிந்து போய்விட்ட நிலையிலும் தனது மிச்ச சொச்ச சக்திகளையெல்லாம் ஒன்று கூட்டி - சோசலிசத்தின் முனையை மழுங்கடிக்க - அதன் சர்வதேச வியாபகத்தை அழித்தொழிக்க - உலகத் தொழிலாளர் வர்க்கத்தின் மத்தியில் ஆழ ஊன்றிவிட்ட அதன் வைரம் பாய்ந்த வேர்களை வெட்டியெறிந்திட பகீரதப் பிரயத்தனம் எடுத்து வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்கொன்று முற்றிலும் முரண்பட்ட சமுதாய அமைப்புகளுக்கிடையில் நடைபெற்றுவரும் இந்த பிரகடனப்படுத்தப்படாத போரானது, புவிப் பரப்பின் வெவ்வேறுபட்ட இடங்களில் - பல்வேறு வடிவங்களில் நிகழ்ந்த வண்ணமே இருக்கிறது என்பதை உலகெங்கும் நிகழும் சம்பவங்கள் வெளிக்கொண்டு வருகின்றன.

சமுதாயங்களின் வரலாறு ஒன்றினது அழிவிலும் சிதைவிலுமே மற்றொன்று உருவெடுத்த நிகழ்வுகளையே வெளிப்படுத்தி வந்திருக்கின்றது. உற்பத்திப் பரிவர்த்தனை முறையின் வளர்ச்சிப் போக்கின் ஒவ்வொரு கட்டங்களிலும் சமுதாயங்களின் சிதைவுகளும், அழிவுகளும் நிகழ்ந்து வந்துள்ளன. ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு வடிவம் பெற்றிருந்த சமுதாய அமைப்பானது குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் கட்டம்வரை அனைத்து மனிதர்களதும், சுதந்திரத்திற்கான அடிப்படை இலக்கின் எதிர் முனையை நோக்கியே வளர்ந்து சென்றிருக்கிறது என்பதை அதன் வளர்ச்சிப் போக்கில் மிதிபட்டுச் சிதைபட்ட சமுதாயங்களின் வரலாறுகளும் இன்றைய சமுதாய அமைப்பு முறைகளும் வெளிப்படுத்தியிருக்கின்றன.

இன்று புவிப்பரப்பின் பெரும்பகுதிமீது தனது ஆதிக்கத்தினைச் செலுத்திக் கொண்டிருக்கும் இந்த சமுதாய அமைப்பானது தவிர்க்க முடியாதவாறு தானே வளர்த்துவிட்டிருக்கும் பாட்டாளிவர்க்கத்தினை வலுக்கட்டாயமாக அடக்கி ஒடுக்கி அதன்மீது தன்னை இருத்தி வைத்துக் கொண்டு மேலும் மேலும் வளர்ந்து செல்ல முயன்றுகொண்டிருக்கிறது.

உலகத் தொழிலாள வர்க்கமானது சோஷலிசக் கருத்துக்களால் கவரப்பட்டு, சகோதரத்துவம், சமத்துவம் என்ற மிக உன்னதமான அடிப்படைக் கோட்பாடுகளைக் கொண்ட மக்கள் கூட்டு ஒன்றை உலகம் பூராவும் நிறுவிவிட வேண்டும் என்ற வேட்கையினால் திரட்டப்பட்டு வருகின்றார்கள்.

சிறுகுழந்தையின் விளையாட்டுக் கருவி முதல் பிரமாண்டமான இயந்திர சாதனங்கள் வரை உலகத்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்தையுமே படைத்துத் தருகின்ற தொழிலாள வர்க்கமானது சோசலிச சமுதாயத்தின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டு - தமது நிஜமான வாழ்நிலைமைகள் அந்த மகோன்னதமான சமுதாயத்தின் உருவாக்கத்திலேதான் வெளிக்கொண்டுவர முடியும் என்பதைக் கச்சிதமாகப் புரிந்து கொண்டதன் விளைவாக தம்மை இறுகக் கட்டிப் போட்டிருக்கும் இந்த முதலாளித்துவ அமைப்பின் கட்டுக்கோப்பில் இருந்து தம்மை விடுத்துக் கொள்ளவும் அதே வாழ்வில் மனித வாழ்வின் இலக்கணத்தை எடுப்பாக உரைத்து வைத்திருக்கும் சோசலிச சமுதாயத்தை நோக்கி தம்மை முழுமுனைப்புடன் முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

புரட்சியை முழுமையாக செய்து முடிக்க வல்லது இந்த பாட்டாளி வர்க்கம்தான் என்பதை புரட்சியின் வரலாறுகள் நிரூபித்து இருக்கின்றன. இந்த வர்க்கம்தான் முதலாளித்துவத்தின் நெருக்குவாரங்களை நேரடியாக அனுபவிக்கின்ற வர்க்கமாக இருக்கின்றது. ஆகவேதான் அது புரட்சியின் அவசியத்தை நாடி நிற்கிறது - அதுதான் புரட்சியினை முன்னெடுத்துச் செல்ல தகைமையுடைய வர்க்கமாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் அடிநிலையில் இருத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த சக்திமிக்க வர்க்கத்தைக் கண்டுபிடித்து அதன் போர்க்குணங்களைத் திரட்டி தீட்டிக் கூர்மையடையச் செய்வதன் மூலம்தான் முதலாளித்துவ அமைப்பைக் கெத்தில் தெறமுடியும் என்ற யதார்த்தமான இந்தக் கருத்தை நான் பல முறை இங்கு வலியுறுத்தி வந்திருக்கிறேன்.

இந்தப் புரட்சியின் நியதிப் போக்கின்படி புரட்சி செய்யத் தகைமை பெற்றுள்ள பாட்டாளி வர்க்கம் ஈழத்தில் ஒரு புரட்சிக்குத் தயாரான நிலையில் வைக்கப்பட்டிருக்கிறதா? நிச்சயமாக அந்த நிலை இன்னும் உருவாகவில்லை. உருவாக்கப்படவும் இல்லை. தமது உடலுழைப்பை விற்பதன் மூலமே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றாட தேவைகளைப் பூர்த்திசெய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் வர்க்கம் பாட்டாளி வர்க்கமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. இவர்களது உழைப்பு முதலாளித்துவ வர்க்கத்தால் சுரண்டப்படுவதாலும், இவர்களது வாழ்நிலைமைகள் அரசியல்ரீதியாகப் புறக்கணிக்கப்படுவதாலும் இவர்கள் சுரண்டப்படும், ஒடுக்கப்படும் வர்க்கமாக இனங்காணப்படுகிறார்கள். மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் பாட்டாளி வர்க்க வரையறைக்குள் வந்து சேர்கிறார்கள். ஆனால் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முழுமையான புரட்சிகர வர்க்கமாக இன்னும் தயாரிக்கப்படவில்லை. இவர்களிடம் இயற்கையாகவே புதையுண்டு கிடக்கின்ற வைராக்கியம் மிகுந்த போர்க்குணங்கள் வெளிக் கொணரப்படவில்லை. இந்தப் பாட்டாளி வர்க்கமானது தனது முதல்படி போராட்டக் கட்டத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

தொழிற்சங்க போராட்ட வட்டத்தைவிட்டு-வெளியேறி முதலாளித்துவ பொருளுற்பத்தி முறையினை அடிப்படையாகக் கொண்ட இந்த அமைப்பு முறையினைத் தகர்த்தெறியக் கூடிய சமூக, பொருளாதார, அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தும் புரட்சியின் திசை நோக்கி இவர்களை முன்னெடுத்துச் செல்லவேண்டும். இன்று இவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சந்தர்ப்பவாத தொழிற்சங்கத் தலைமைகளின் பிடியிலிருந்து மீட்டெடுத்து இவர்களை அரசியல் ரீதியாக அணிதிரட்டுவதன் மூலம்தான் ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்கமாக இவர்களைக் காணமுடியும்.

ஆகவேதான் இந்த சக்திமிக்க வர்க்கத்தின் மத்தியில் உன்போன்ற போராளிகளுக்கு பாரிய வேலைகள் காத்துக்கிடக்கின்றன.

ஏகாதிபத்தியத்தின் எதிர்ப்புரட்சிச் சதிகள் மிக வேகமாக முடுக்கிவிடப்பட்டிருக்கும் இக்கால கட்டத்திலே வெறுமனே துப்பாக்கிகளும், கைக்குண்டுகளும் புரட்சியைக் கொண்டுவந்துவிடாது என்பதில் நீ உறுதியாக இருப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது எனது நம்பிக்கை. உன் போன்ற தோழர்களின் நிதானம் தவறாத போர்த் தந்திரங்களின் மூலம் தான் மக்கள் திரள் புரட்சியின் பால் ஈர்க்கப்படும் – நடக்கவிருக்கும் புரட்சிக்கு தலைமைப் பதவி வகிப்பதற்கான வலிமைவாய்ந்த கூர்மதி கொண்ட புரட்சிக் கட்சியொன்றை கட்டியமைத்திட உனது பணிகள் பயன்பட வேண்டும். என்பதைக் கூறி உன்னிடம் புரட்சிகரவாழ்த்துக்களைத் தெரிவித்து விடை பெறுகிறேன்.

தோழன்
காசி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றி சல்வடோரின் புரட்சியாளருக்கே!



*FMLN fighters . . .*

கியூபா, நிக்கரகுவா வரிசையில் செங்கொடியைப் பறக்கவிட்டு இலத்தீன் அமெரிக்காவைச் சிவப்பாக்கப் போகும் நாடு எல்சல்வடோர். அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மை அரசைத் தகர்த்தெறிந்து ஏகாதிபத்தியச் சுரண்டலுக்கு முற்றுப் புள்ளி வைத்து சமவுடமைத் தென்றலை பரவச் செய்ய இடதுசாரிப் போராளிகள் இன்று இணையப்பட்டு FMLN இன் மின்னல் அணிதிரண்டு போராடுகிறார்கள். [illegible] இலட்சியம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களுக்கிடையேயான ஐக்கியம் அவர்கள் நிலையில் வெற்றியைக் கொடுக்கிறது. அமெரிக்க ஏகாதிபத்தியம் அள்ளி வழங்கிய ஆயுதங்கள், அளித்த விசேட பயிற்சிகள் எதுவுமே இந்த விடுதலைப் போராட்டத்திற்கு முன்னால் நிற்கமுடியவில்லை. நாட்டின் மூன்றிலொன்றுக்கும் அதிகமான பகுதி இன்று போராளிகள் வசம். மக்கள் போராளிகளின் பின்னால். இவர்களுடைய தாக்குதல் திறமைக்கு சமீபத்தில் ஹெலிகொப்டர் இரண்டை சுட்டுவீழ்த்தி அதிநவீன இராணுவத் தளவாடங்களை சுட்டு வீழ்த்தியதையும், பாண் அமெரிக்கன் நெடுஞ்சாலையைக் கைப்பற்றியதும் சமீபத்தியச் சான்றுகள். போராளிகளின் இந்தத் தாக்குதல்கள் இன்று அமெரிக்க கைப்பொம்மை அரசை நெருக்குவாரத்திற்கு உள்ளாக்கி போராளிகளை நோக்கி பேச்சு வார்த்தைக்கு வரச் செய்திருக்கிறது. எத்தனை பேச்சுவார்த்தை நடந்தாலும் போராட்டம் தொடரும். சல்வடோர் சமவுடமைத் தேசமாகும் என்ற போராளிகளின் உறுதி அவர்களுக்கு வெற்றியைக் கொடுப்பதுவும் சல்வடோரை சிவப்பாக்குவதும் உறுதி.


---

தோழர்களே,

நெருக்கடிகளின் மத்தியிலும் 'தமிழ் முரசிற்கு' நீங்கள் தரும் தொடர்ந்த ஆதரவு மகத்தானது; மறக்க முடியாதது. தொடர்ந்தும் 'தமிழ் முரசு' ஈழவிடுதலைப் போராட்டத்தில் தனது பங்கினை சரியாக ஆற்ற 'தமிழ் முரசை' நெறிப்படுத்துங்கள்... வளர்த்தெடுங்கள். சகல தொடர்புகட்கும்....

The Editor,
"TAMIL MURASU"
TAMIL EELAM LIBERATION COUNCIL, (France)
10 rue des Martyrs, 75009 PARIS.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிலந்தியும் ஈயும்

நீங்கள் எல்லோரும் அதை நன்கு அறிவீர்கள்-அந்தப் பூச்சி சால் போன்ற வயிறுடையது, முடிகள் மண்டிய பிசுபிசுப்பான உடல் கொண்டது. பகலின் ஒளியிலிருந்து அப்பால் விலகி இருண்ட இடங்களில் பதுங்கியிருக்கிறது, கொடூர வலையைப் பின்னி வைக்கிறது. கவனக் குறைவான அல்லது சிந்தனையில்லாத, பரிதாபத்துக்குரிய ஈ இந்த வலையிலே அகப்பட்டுக் கொள்ளுகிறது. அருவருப்பான அந்தக் கோரப் பூச்சி கண்ணாடி போன்ற உருண்டைக் கண்களுடையது, தன்னிடம் அகப்பட்டுக் கொள்ளும் ஈயைக் கெட்டியாய்ப் பற்றிக் கொண்டு அடுத்து நெரிப்பதற்கு வசதியாக கோணமாய் மடங்கிக் குச்சி போலமைந்த நீண்ட முன்கரங்களைக் கொண்டது. அந்தக் கொடுங்காரப் பூச்சிதான் சிலந்தி.

அதோ அந்த மூலையில், இரை எப்பொழுது தன் பிடியில் வந்து சிக்குமென்று ஆடாமல் அசையாமல் உணர்ச்சியற்றது போல் காத்திருக்கிறது. அல்லது மெல்லிய ஈயைச் சிக்க வைத்துத் தப்ப முடியாதபடிக் கட்டுண்டு போகச் செய்யும் தனது கொடுங்கார இழைகளை பேய்த்தனமாக நெய்துகொண்டிருக்கிறது! வெறுக்கத்தக்க கொடும் பிறவியான அது அளவில்லா முயற்சியெடுத்து வேலை செய்கிறது, தன்னிடம் வந்து சிக்கும் இரை தப்புவதற்கு சிறிதும் வழியின்றி கடைசி இழைவரை யாவற்றையும் செவ்வனே அமைத்துத் தனது வலையைக் குற்றம் குறையற்றதாக செய்கிறது. முதலில் ஓர் இழையைப் பின்னியமைக்கிறது. பிறகு இரண்டாவது, மூன்றாவது - இப்படி மேலும் மேலும் அமைத்துச் செல்கிறது. சிக்கும் இரை சாகுமுன் எவ்வளவுதான் துடியாய்த் துடித்தாலுங்கூட வலை பிய்ந்து போகாமல், அதிர்வுங்கூட இல்லாமல் கெட்டியாய் இருக்கும் பொருட்டு, இழைகளை நெருக்கில் இறுக்கிச் சுற்றுகிறது, மறுமுறையும் இறுக்கிக் கெட்டியாய்ச் சுற்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவில் வலை தயாராகிவிடுகிறது, கண்ணி வைக்கப் பட்டுவிட்டது, இனித் தப்ப வழி ஏதுமில்லை - சிலந்தி இப்போது அதன் உறைவிடத்தில் பதுங்கிக் கொள்கிறது. சந்தேகியாத ஈ. பசியால் உந்தப்பட்டு உணவு தேடிக் கொண்டு எப்போது வருமென்று சிலந்தி காத்திருக்கிறது.

ஈ. வந்து சேர சிலந்தி அதிக நேரம் காத்திருக்க நேர்வதில்லை. பாவம், அப்படியும் இப்படியுமாய்ப் பார்த்தவாறு ஈ. கீழ வந்து விரியப் பரந்திருக்கும் இழைகளை அடைந்து துணுக்குற்று நடுங்குகிறது, சிக்குண்டு துடிக்கிறது, பெருமுயற்சி செய்கிறது - அவ்வளவுதான், இனி ஒன்றும் செய்வதற்கில்லை.

ஈ. அகப்பட்டுவிட்டதைக் கண்டதும் சிலந்தி தனது பதுங்கிடத்தை விட்டு மெள்ள முன்னே வருகிறது. பசி வெறிகொண்ட கண்களுடன் இச்சிக் கரங்களை அசைத்துக் கொண்டு தனது இரையை நோக்கி முன்னேறுகிறது. அது அவசரப்படத் தேவையில்லை, தன் வலையில் அகப்பட்டுக் கொள்ளும் அபாக்கியசாலி தப்ப முடியாது என்பது அந்தப் பயங்கரப் பைசாசத்துக்குத் தெரியும். அது மேலும் மேலும் நெருங்கிச் செல்கிறது, துருத்திக் கொண்டிருக்கும் மங்கலான கண்களால் தனது இரையை ஏறிட்டுப் பார்த்து எடைபோடுகிறது, அதைத் தவிக்கச் செய்து திணறடிக்கிறது. ஈ. தன்னை நெருங்கிவரும் பயங்கர அபாயத்தைக் கண்டு நடுங்குகிறது. பிசுபிசுப்பான அந்த இழைகளிலிருந்து பிய்த்துக்கொள்ள முயல்கிறது, தப்பிப்பதற்கு அரும்பாடுபடுகிறது. இந்த மூர்க்கத்தனமான இறுதி முயற்சிகளில் அது தனது பலத்தை இழந்து விடுகிறது.

ஆனால் அதன் முயற்சிகள் பலனளிக்கவில்லை, அதன் பிரயத்தனங்கள் வீணாகின்றன! வலையில் அது மேலும் மேலும் கடுமையாய்ச் சிக்கிக் கொள்கிறது. இதற்கிடையில் சிலந்தி அதை மேலும் மேலும் நெருங்கி வந்து கொண்டிருக்கிறது. சிலந்தியின் கூட்டான வலைப் பின்னல்கள் மெல்லியனவாய் இருப்பினும் தப்ப வழியின்றி ஈ.யை இறுகப் பற்றிக் கொண்டுவிட்டன. இவற்றிடமிருந்து தன்னை விடுவித்துக் கொள்வதற்காக ஈ. மேற்கொள்ளும் முயற்சி ஒவ்வொன்றும் மேலும் அதிகமான இழைகளில் அதை மாட்ட வைத்து, மேலும் அதிகமான வலைப் பின்னல்களில் சிக்கச் செய்கிறது. முடிவில், [illegible] ஆற்றல் அனைத்தும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லிருந்து ஓய்ந்து போய் மூர்ச்சித்துவிடும் ஈ, அதன் பகைவனின், வெற்றியாளனின் அந்தப் பயங்கரச் சிலந்தியின் காலடியில் கிடக்கிறது!

பிறகு அந்தப் படுபயங்கரப் பிராணி முழுமை மண்டிய தனது நெடுங்கரங்களை நீட்டி ஈயைப் பிடித்து தனது கொடூர அரவணைப்பிலே கெட்டியாய் அடுக்கிறது. அடுத்து அது பலமிழந்து போய் நடுங்கும் ஈயின் உடலைக் கடிக்கிறது. ஒருதரம், இரண்டுதரம், மூன்றுதரம் என்று தனது வெறிக்கும் பசிக்கும் ஏற்ப அத்தனைதரம் விருந்து பருகுகிறது. அதன் இரத்தவெறி தற்போதைக்கு அடங்கியதும் பாதி உயிர் போன நிலையில் அந்த ஈயை விட்டு விலகுகிறது. இப்படித் திரும்பித் திரும்பி வந்து ஈயின் உடலில் உள்ள இரத்தம் அனைத்தையும் சத்து அனைத்தையும் உறிஞ்சி எடுத்து விழுங்குகிறது. பாவம் அந்த ஈ, எளிதில் அது உயிரை இழப்பதில்லை, குற்றுயிரும் குலையுயிருமாய் நெடுநேரம் திணறுகிறது.

இரத்த வெறிகொண்ட அந்தப் பைசாசம் தனது இரையிடம் இம்மியளவு உயிர்த்துடிப்பு எஞ்சியிருக்கும்வரை அதை விடுவதில்லை. ஈயின் உயிரை உள்ளுக்கு இழுக்கிறது, அதன் பலத்தை உறிஞ்சியிழுக்கிறது, இரத்தத்தைக் குடிக்கிறது. ஈயிடம் இருந்து பருக எதுவுமே இல்லாமல் போனபிறகுதான் அதை விடுகிறது.

முற்றும் உறிஞ்சப்பட்டு சாகடிக்கப்பட்ட ஈ, மெல்லிறகையும் விட இலேசாகியபின் வலையிலிருந்து தள்ளிவிடப்படுகிறது. சிறிதளவு காற்று வீசியதுமே காற்றோடு காற்றாய் அதுதூரச் செல்லப்படுகிறது. யாவும் முடிந்துவிட்டன.

வயிற்றை நிரப்பிக் கொண்டு திருப்தியோடு சிலந்தி மட்டும் தனது உறைவிடத்துக்குத் திரும்புகிறது. தன்னையும் தனது உலகையும் நினைத்து மனநிறைவு கொள்கிறது, வலுவானவர்கள் உலகில் இனியும் நல்லபடியாகவே காலங்கழிக்க முடிகிறதென அமைதியுற்று கொள்கிறது ......

நகரத்தையும் கிராமத்தையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கத்தினர்களே, உறிஞ்சியெடுக்கப்பட்டுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொல்லப்படும் இந்த ஈ, விழுங்கப்படும் இந்த ஈ நீங்களேதான்! ஏனையோர் வாழ்வது உங்களது இரத்தத்தைக் குடித்துத்தான்! ஒடுக்கப்பட்ட மக்களே, அறிவுத் துறையினரே, ஆலைத் தொழிலாளர்களே, உங்கள் உரிமைகளுக்காக எதிர்த்து நிற்கத் துணியாதோரான அஞ்சி நடுங்கும் இளம் மகளிர்களே, பலமற்றோராய் இருந்து மிதிபடும் பெண்களே, யுத்த வெறியர்களுக்குப் பலியாகும் அப்பாவி மக்களே! சுருங்கக் கூறின் ஏழைகளும் சுரண்டப்படுவோருமானோரே, உங்களுடைய இரத்த நாளங்களிலிருந்து உறிஞ்ச ஏதும் இல்லாமற் போனதும் உதறியெறியப்படுவோரே! எல்லாச் செல்வங்களின் உற்பத்தியாளர்களே, தேசத்தின் இதயமும் மூளையும் ஜீவ சக்தியுமானோரே, அடி பணிந்து ஓசையின்றி எங்கோ மூலையில் அவலமான முறையில் மடியும் உரிமையன்றி வேறு ஏதும் உரிமை இல்லாதவர்களே! உங்களுடைய இரத்தத்தை, வியர்வையை, உழைப்பை, உங்களுடைய சிந்தனைகளை, உங்களுடைய உயிரைக் கொடுத்து உங்கள் எஜமானர்களாகவும் ஒடுக்குமுறையாளர்களாகவும் இருப்போரை — **அருவருக்கத்தக்க சிலந்திகளை** — பெரியவர்களாக்குகிறீர்கள், வலியவர்களாக்குகிறீர்கள்.

எஜமானன், பணமூட்டை, சுரண்டலாளன், வர்த்தகன், முதலாளி, ஏமாற்றுக்காரன், மதத் திணிப்பாளன், எல்லா வகையான புல்லுருவிகள், நம்மை வருத்தும் கொடுங்கோலன், படுமோசமான ஒடுக்குமுறைச் சட்டங்களை இயற்றுபவன், நம்மை அடிமைப்படுத்தும் கயவன் ஆகிய இவர்கள்தான் **சிலந்தி**. மக்கள் செலவில் உண்டு வாழும் ஒவ்வொருவனும், நம்மைக் காலால் மிதித்துத் துவைக்கும், நம் துன்ப துயரங்களையும் பயனற்றுப் போகும் நமது முயற்சிகளையும் எள்ளி நகையாடும் ஒவ்வொருவனும் தான் இந்தச் **சிலந்தி**.

ஏழைத்தொழிலாளிதான் ஈ. வேலை வாங்கும் எஜமானன் பிறப்பிக்க விரும்பும் கொடிய சட்டங்களுக்கு எல்லாம் இந்த ஏழைத் தொழிலாளி அடங்கி நடக்க வேண்டியிருக்கிறது, ஏனெனில் வாழ வழியற்ற நிலையிலுள்ள அபாக்கியவானான இந்தத் தொழிலாளி தனக்கும் தன் குடும்பத்துக்கும் ஜீவனோபாயம் தேடிக் கொள்ள வேண்டியிருக்கிறது. பெரிய ஆலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாளிதான் சிவந்தி. தனது தொழிலாளர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நாளொன்றுக்குப் பெரும் பணத்தைச் சம்பாதிக்கும் இந்த முதலாளி தொழிலாளர்களிடமிருந்து அதிக நேர வேலையைப் பெற்று அவர்களுக்கு மிகக் குறைந்த அரைப்பட்டினிக் கூலியைக் கொடுக்கிறான்.

சுரங்கத்தின் நச்சுக் காற்றில் தன் உயிரைப் பலி கொடுக்கிறானே, தான் அநுபவிக்கப் போகாத செல்வங்களை தரைக்கடியிலிருந்து வெட்டியெடுக்கிறானே அந்த சுரங்கத் தொழிலாளிதான் ஏ. திருவாளர் பாங்கு முதலாளிதான் சிவந்தி. இவரின் பங்குகள் மதிப்பில் இரு மடங்காகவும் மும்மடங்காகவும் உயர்ந்து செல்கின்றன, ஆயினும் இவர் திருப்தியடைவதே இல்லை, மேலும் மேலும் உயர்ந்த லாப விகிதங்கள் வேண்டுமென்கிறார், தொழிலாளர்களுடைய உழைப்பின் பயன்களை அவர்களிடமிருந்து சூறையாடிக் கொண்டு விடுகிறார், தொழிலாளர்கள் சொற்ப அளவு கூலி உயர்வு கேட்கத் துணிவார்களாயின் ராணுவத்தை அழைத்துத் "கலகக்காரர்களுக்குத்" துப்பாக்கிக் குண்டுகளின் சுவையைத் தெரியப்படுத்துகிறார்.

சின்னஞ்சிறு வயதில் அறியாப் பருவத்தில் ஆலையிலும் பட்டறையிலும் பிறர் வீட்டிலும் மாடாய் வேலை செய்து குடும்பச் செலவுக்கு வரவை இணையாக்க உதவ வேண்டியிருக்கும் சிறுபிள்ளைதான் ஏ. போதாமையால் தம் குழந்தைகளை காவு கொடுக்கும்படி பலவந்தம் செய்யப்படும் ஏழைப் பெற்றோர்களல்ல சிவந்தி; இயற்கை உணர்ச்சிகளின் இந்த வக்கரிப்புகளை, தனது சொந்தக் குடும்பம் இப்படி நாசமாவதை மாறாத கொடிய விதியாக்கும் இன்றைய கெட்ட நிலைமைகளேதான் சிவந்தி.

மக்களுடைய மகளாய்ப் பிறந்த மதிப்புக்குரிய மங்கை நேர்மையாய் வாழ வழி தேடுகிறாள். ஆனால் ஆலை முதலாளி அல்லது இயக்குநரின் காம வெறிக்குப் பணியாவிடில் வேலை பெறமுடியாதவளாய்த் திண்டாடுகிறாள். அவளைக் கெடுக்கும் அந்தக் கொடியவன் பிறகு பல சந்தர்ப்பங்களில் பிள்ளையும் பிறக்கப் போகும் நிலையில் – "மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக" இரக்கமின்றி அவளை நடுத்தெருவில் விடவே நிர்க்கதியாகிறாள் – அவள் தான் ஏ. தனக்கு இழைத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயர் குடும்பத்தில்" பிறந்த வீணன், கூத்தடித்துத் திரிந்து அறியாப் பெண்களைச் சீரழித்து சாக்கடையில் தள்ளுகிறானே, இப்படித் தன்னால் சீரழிக்கப்படும் பெண்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தன்மதிப்பும் உயர்வதாய்க் கருதுகிறானே அவன் தான் சிலந்தி.

நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கும் உழவர்களே, செல்வந்தர்களான நிலப்பிரபுக்களுக்காக நிலத்தை உழுது நீங்கள் அறுத்தெடுத்துக் கொள்ளப் போகாத பயிரை விதைத்தும், நீங்கள் சுவைக்கப் போகாத கனிகளை வளர்த்தும் வரும் நீங்கள்தான் ஈ. தான் சொகுசாய் சுகபோக ஆடம்பர வாழ்க்கை நடத்துவதற்காகத் தனது ஏழைச் சாகுபடியாளர்களையும் பண்ணையடிமைகளையும் கூலியாட்களையும் சிறிது நேரம் கூட ஓய்வின்றி வேலைவாங்கும் அந்த நிலப்பிரபுதான், ஆண்டுக்கு ஆண்டு வாரத்தை உயர்த்தியும் நேர்மையான உழைப்புக்குரிய கூலியைக் குறைத்தும் செல்லும் அந்த நிலப்பிரபுதான் சிலந்தி.

ஏழையும் எளியோருமான நாம் எல்லோரும்தான் ஈ. நீண்ட நெடுங்காலமாய் வழிபாட்டு மேடையின் படிகளில் நின்று நடுங்கியும், சமயக் குருமார்களது சாபச் சொற்களுக்குத் தலைவணங்கியும், சமயச் சபையின் கீர்த்திக்காகவும் உல்லாச விளையாட்டுக்களுக்காகவும் பொறாமையும் ஒருவரை ஒருவர் அடிமை செய்தும் வந்திருக்கும் நாம்தான், நமது ஒடுக்குமுறையாளர்களை அவர்களது அநீதியின் பலன்களை அனுபவிக்கும்படி விட்டுவந்துள்ள நாம்தான் ஈ. நயவஞ்சகமும் பேராசையும் நிறைந்த பார்வை கொண்டுள்ள அந்தக் குருமார்தான், இழிநிலையிலே இருந்தும் தனது போதனையின் மேலும் தனது பக்தகோடிகளின் எளிய உள்ளங்களை மயக்கங்கொள்ளச் செய்து பணிந்து நடுங்கும் அடிமைப் புத்தியை வளர்த்தும், இதன் மேலும் மக்களது ஆன்மாவை மாசுபடுத்தியும் தேசங்களையே பாழ்படச் செய்து செல்லும் அந்தக் குருமார்தான் சிலந்தி.

சுருங்கக் கூறின் ஒடுக்கப்பட்டோரும் அடிமைப் பட்டோரும் சுரண்டப்படுவோரும் நாம் ஈ. கேடுகெட்ட சுரண்டல் வர்த்தகர் என்றோ, சட்ட முறையற்ற கொடுங்கோலர் என்றோ எப்படி வேண்டுமாயினும் அழைக்கப்படத் தக்கவராயுள்ள அவரேதான் சிலந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலந்தி முன்னொருகாலத்தில் அரண்கள் செய்யப்பட்ட பெரிய கோட்டைகளிலும் நிலப்பிரபுத்துவப் பண்ணைகளிலும் தனது வலையைப் பின்னி வந்தது, இன்று அது பெரிய தொழில் மையங்களில், இக்காலத்து புண்ணியவான்களது செல்வமனைகளில் தன்னை இருத்திக் கொள்ள முனைகிறது. பெரும்பாலும் தொழிற்சாலை நகரங்களில்தான் அதை அதிகமாய்க் காண்கிறோம். ஆயினும் கிராமப் புறங்களிலும் சிறு ஊர்களிலும் அது வலை பின்னிக் கொண்டுதான் இருக்கிறது. எங்கே சுரண்டல் தாண்டவமாடுகிறதோ, எங்கே தொழிலாளியும், சொந்த இல்லாத பாட்டாளியும், சிறு கைவினைஞரும், நாட்கூலியாரும் கடன்சுமை தாங்காமல் வருந்தும் சிறு விவசாயிகளும் சுரண்டல் வார்க்கர்களது வரைமுறையற்ற லாபவெறிக்கு ஈ. இரக்கமின்றி உட்படுத்தப்படுகிறார்களோ அங்கெல்லாம் அது இருக்கக் காணலாம்.

அது எங்கே இருப்பினும், நகரமாயினும் கிராமமாயினும், அங்கே பேதைகளான ஈ.க்கள் பகைவரது வலைகளில் சிக்கிக்கொண்டு தப்பமுடியாமல் தவிப்பதைக் காணலாம். துடிதுடித்துப் பலமிழந்து ஓய்ந்து உலர்ந்து போய் மடிவதைக் காணலாம்

பலமில்லாத மெல்லிய ஈ.க்கும் இரத்தவெறி கொண்ட கொடூரச் சிலந்திக்கும் இடையே எத்தனையோ நூறு ஆண்டுகளாய் நடைபெறும் இந்தப் போரில் புரியப்பட்டுள்ள சொல்லொணாத பயங்கரங்களுக்கு அளவே இல்லை! இந்தக் கதை கொடுமையிலும் கொடுமையானது, அதைத் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை. நடந்தது நடந்து விட்டது, கடந்த காலம் போகட்டும், நிகழ் காலத்தையும் எதிர் காலத்தையும் பற்றிப் பேசுவோம்.

சிலந்திக்கும் ஈ.க்கும் இடையே நடைபெறும் இன்றைய போராட்டத்தை நெருங்கிச் சென்று உற்று நோக்குவோம். நிலைமையை உள்ளது உள்ளபடி நாம் உணர்ந்து கொண்டாக வேண்டும். ஈ.க்களாகிய நாம் நமது பகைவர்கள் நமக்காக மீண்டும் எப்படிப்பட்ட கண்ணிகளை வைத்தமைத்திருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களுடைய தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கண்டு கொண்டாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றுக்கும் மேலாய் நாம் ஒன்றுபட்டாக வேண்டும். நாம் தனித்து நிற்கும் வரை நம்மைக் கட்டியிருத்தி வைக்கும் விலங்குகளைப் பிய்த்தெறியப் பலமற்றோராகவே இருப்போம். நமக்கு விலங்குகளிடும் சக்திகளை உடைத்தெறிவோம், நமது பகைவர்களை அவர்களது பதுங்கு இடங்களிலிருந்து விரட்டியடிப்போம், எங்கும் அறிவின் பிரகாச ஒளியைப் பரப்புவோம், பேய்த்தனமான இந்தச் சிலந்தி இனி எந்நாளும் இருண்ட மூலையில் இருந்து தனது கொலைகாரக் கைங்கரியத்தைச் செய்ய வழியில்லாதபடி செய்வோம்!

ஈக்களே, நீங்கள் விரும்பினால், மெய்யாகவே விரும்பினால், யாராலும் உங்களை வெல்ல முடியாதபடி அப்படி நீங்கள் பெரும் பலம் படைத்தோராகிவிட முடியும்! உண்மைதான், இன்றும் சிலந்திகள் பலமுடையதாகவே இருக்கின்றன, ஆனால் எண்ணிக்கையில் அவை மிக மிகச் சொற்பம். ஈக்களான நீங்கள் சின்னஞ் சிறியவர்களாக இருப்பினும், செல்வாக்கு இல்லாதிருப்பினும், எண்ணிக்கையில் பரவலாய் இருப்பவர்கள்; வாழ்வே நீங்கள்தான், உலகமே நீங்கள்தான் — மெய்யாகவே நீங்கள் விரும்புவீர்களாயின் எல்லாமே நீங்கள்தான்! நீங்கள் ஒன்றுபட்டால், உங்களுடைய இறக்கைகளின் ஒரேயொரு வீச்சாலேயே எல்லா இழைகளையும் அறுத்தெறிந்து விடலாம். இன்று உங்களை இறுக்கமாய்க் கட்டி அடக்கி வைத்திருக்கும் சிலந்தி வலைகளை எல்லாம், உங்களைத் திணற வைத்துச் சுருக்கச் செய்து பட்டினியால் சாகடிக்கும் இந்த வலைகளை எல்லாம் அடியோடு துடைத்தெறிந்து விடலாம், வறுமையையும் அடிமை வாழ்வையும் நீங்கள் ஒழித்துக் கட்டி விடலாம். உண்மையாகவே நீங்கள் விரும்புவீர்களாயின் எல்லாம் செய்யலாம்!
ஆகவே விரும்பக் கற்றுக் கொள்ளுங்கள்!

— வில்ஹெல்ம் லீப்னெஹ்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக நோக்கு

பிரான்சு

## பிரெஞ்சு ஜனாதிபதியின் ஆதரவு குறைகிறது...!

பிரெஞ்சு ஜனாதிபதி மித்திரனுக்கான மக்களின் ஆதரவு வெகுவாகக் குறைந்துவருவதை சமீபத்திய அபிப்பிராய வாக்கெடுப்புக்கள் காட்டுகின்றன. இறுதியாக எடுக்கப்பட்ட அபிப்பிராய வாக்கெடுப்பு ஒன்று 26%.மான பிரெஞ்சு மக்கள் மாத்திரமே ஜனாதிபதி மித்திரனின் ஆட்சிமுறைக்கு ஆதரவாக இருக்கிறார்கள் எனத் தெரிவிக்கிறது. கடந்த 25வருட காலப்பகுதியிலே மிகக் குறைந்த ஆதரவு மித்திரனுக்கே கிட்டியுள்ளது. அதிகரிக்கும் வேலையில்லாப் பிரச்சினை, கட்டுப்படுத்த முடியாத பணவீக்கம், குறைப்படும் இலாபமும், கைத்தொழில் உற்பத்தி தேக்கம், வெளிநாட்டுக் கொள்கைகளில் ஏற்பட்ட குழப்பம் ஆகியன அரசுக்கு ஏற்பட்ட ஆதரவுக்குறைவுக்குக் காரணமாக இருக்கின்றன. தொழிலாளர்களுக்கு எதிரான புதிய பிரதமரின் வேலையாட்கள் குறைப்பு நடவடிக்கையும் அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதே வேளையில் எதிர்க்கட்சிகளால் கூட மக்களின் ஆதரவைப் பெறமுடியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சி தொடர்ச்சியாக உட்குழப்பங்கள் காரணமாகவும் தெளிவான கொள்கையை மக்கள் முன் வைக்காததாலும் தனது ஆதரவை இழந்து கொண்டுவருகிறது.

இதே சமயம் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் வகையில் லிபியாவின் தலைவர் கடாபியுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்ட ஜனாதிபதி சிரியாவுக்கு விஜயம் ஒன்றையும் மேற்கொண்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிக்கரகுவா தேர்தலில் சான்டினிஸ்டிய புரட்சியாளருக்கு அமோக வெற்றி! அமெரிக்க எதிர்ப்புரட்சிச் சதிகள் தொடர்கின்றன...



ORTEGA

அமெரிக்க ஏகாதிபத்தியமும் அதனுடைய கூலிப் படைகளினதும் எதிர்ப்புரட்சிச் சதிகளை மீறி நிக்கரகுவாவின் பொதுத்தேர்தல் அமைதியாகவும் ஜனநாயக முறையிலும் நடத்தப்பட்டு சான்டினிஸ்டிய புரட்சியாளருக்கு அமோக வெற்றி கிட்டியுள்ளது. மேற்படி புரட்சியரசின் சார்பாக போட்டியிட்ட தோழர் டானியல் ஒட்டேகா ஏறத்தாழ 70%மான வாக்குகளைப் பெற்று நிக்கரகுவாவின் ஜனாதிபதியாகியுள்ளார். அமெரிக்க ஏகாதிபத்தியம் தவிர்ந்த பெரும்பாலான உலக நாடுகள் மேற்படி தேர்தல் முடிவுகளை அங்கீகரித்துள்ளன.

அதே வேளையில் சான்டினிஸ்டியப் புரட்சிகர அரசைக் கவிழ்ப்பதற்கான தனது சதிகளை தீவிரமாக முடுக்கிவிட்டுள்ளது. விரைவில் நிக்கரகுவாவின் மீது ஏகாதிபத்தியப் படைகள் ஆக்கிரமிப்பை மேற்கொள்ளலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது. நிக்கரகுவாவிற்கு அப்பாலுள்ள கடலில் அமெரிக்கக் கப்பல்கள் பயிற்சிகளில் ஈடுபட்டுள்ளதுடன் 25 ஆயிரத்துக்கு மேற்பட்ட அமெரிக்கத் துருப்புக்களும் விசேடமாக அனுப்பப்பட்டுள்ளார்கள். இது பற்றி தோழர் டானியல் ஒட்டேகா, நிக்கரகுவா புரட்சி எதிர்நோக்கும் மிக ஆபத்தான நேரம் இது என கூறியுள்ளதும் ஆனால் இத்தாக்குதலை எதிர்க்க தமது படைகள் பூரண தயார் நிலையில் இருப்பதாகவும் கூறியுள்ளார். இச் சமயத்தில் ஆயிரக்கணக்கான இளைஞர்களும் யுவதிகளும் புரட்சிப் படையுடன் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். நிக்கரகுவா மக்கள் தொடர்ந்து தமது [illegible] ஆதரவை அரசுக்கு அளித்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் யூனியன்.

## 'ஆப்கான் பயங்கரவாதத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆதரவு' - சோவியத் பிரதிநிதி குற்றச்சாட்டு.

ஆப்கானிஸ்தானிலுள்ள பயங்கரவாதிகளுக்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் ஆதரவளித்துவருவதாக ஐ.நா. பொதுச்சபைக் கூட்டத்தில் சோவியத் பிரதிநிதி குற்றஞ் சாட்டியுள்ளார். ஆப்கானிஸ்தானிலுள்ள கொள்ளைக்காரர்கள் மேற்குநாடுகளில் சுதந்திரப் போராட்ட வீரர்களாக மதிக்கப்படுகிறார்கள். இக் கொள்ளையர்கள் இதுவரை 1800 பாடசாலைகளை நிர்மூலமாக்கியுள்ளனர். 10 பள்ளிவாசல்களைத் தகர்த்துள்ளனர். 130 மருத்துவமனைகளை அழித்துள்ளனர். ஆப்கானிஸ்தானிலுள்ள எத்தனையோ சமூகப்பிரச்சினைகளும் இனப்பிரச்சனைகளும் என்றோ தீர்த்து வைக்கப்பட்டிருக்கும். இதுவரை இவற்றுக்குத் தீர்வு ஏற்படாமைக்குக் காரணம் இக்கொள்ளையர்களே என்று கூறிய சோவியத் பிரதிநிதி நிக்கரகுவா மக்களுக்கு எதிராக செயற்படுவது போல ஆப்கானிஸ்தான் மக்களுக்கும் எதிராக அமெரிக்க ஏகாதிபத்தியம் செயல்படுவதாக குற்றம் சாட்டியதுடன் பயங்கரவாதத்தின் தரம் இந்நாட்டின் கொள்கை அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

## 'இந்திய எதிர்ப்புச் சக்திகளுக்கு படுதோல்வி' - பிராவ்தா.

'இந்திரா காந்தியின் படுகொலை ஆழமான உள்நாட்டு நெருக்கடியைக் கொண்டுவருமென எதிர்பார்த்த உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளின் சதித்திட்டங்கள் படுதோல்வியை அடைந்துள்ளன. மிகப் பெரும்பான்மையான மக்கள், வைரியர்களின் ஆத்திரமூட்டக்கூடிய அறைகூவலைப் பின்பற்றவில்லை. தேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவும், உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளின் சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு எதிராக நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவும் இந்நாட்களில் இந்தியாவின் பல பாகங்களிலும் ஏராளமான பேரணிகள் நடைபெற்று வருகின்றது. மேற்குலகில் இந்தியாவுக்கெதிராக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு நடவடிக்கைகளினால் இந்தியாவில் நியாயமான கவலையும் சீற்றமும் ஏற்பட்டிருக்கின்றன' என பிராவ்தா கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலஸ்தீனம்

## தடைகளைத் தகர்த்து பாலஸ்தீன தேசிய கூடியது.


ARAFAT

ஏகாதிபத்தியத்தின் எதிர்ச்சதிகள், இஸ்ரேலின் தாக்குதல் எச்சரிக்கை, சிரிய ஆதரவு பலஸ்தீனிய பிரிவினரின் மிரட்டல்கள் அனைத்தையும் தகர்த்தெறிந்து பாலஸ்தீன தேசிய மன்றம் தனது 17வது கூட்டத் தொடரை ஜோர்டானில் நடத்தியது. யசீர் அரபாத்தின் தலைமையில் கூடிய இம்மன்றம் சிரிய ஆதரவாளர்களால் பகிஷ்கரிக்கப்பட்ட போதும் சபையின் மொத்தப் பிரதிநிதிகளான 379 பேரில் 257 பேர் கலந்து கொண்டனர். பாலஸ்தீனிய மக்களின் இலட்சியமான சுதந்திர பாலஸ்தீன ராஜ்யத்திற்கான போராட்டத்தை உறுதிப்படுத்திய இக்கூட்டத் தொடர் யசீர் அரபாத்தின் தலைமைக்கான ஆதரவை தெளிவாக்கியது. மாநாட்டில் உரையாற்றிய பலரும் சிரியாவின் மீதுள்ள அதிருப்தியை தெரிவித்ததுடன் சிரிய அரசை கடுமையாக விமர்சித்தும் இருந்தார்கள். மேற்படி கூட்டத் தொடரில் உரையாற்றிய முன்னாள் சிரிய அமைச்சர் ஹசீப் அல்வான் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத்திற்கெதிரான சிரியாவின் நடவடிக்கைகள் பாலஸ்தீனிய மக்களின் முதுகுகளில் குத்தப்பட்ட விஷ முட்கள் என்றும் ஆயிரக்கணக்கான கம்யூனிஸ்ட், இஸ்லாமிய, இடதுசாரி இளைஞர்கள் சிரியச் சிறைகளில் அடைக்கப்பட்டுச் சித்திரவதைக்குள்ளாகி வருவதாகவும் அவர் கூறினர். சிரிய அரபாத்தின் தலைமையை நிராகரிக்கும்படி கோரி தீர் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதுடன் மேற்படி பாலஸ்தீனிய தேசிய மன்றத்தின் கூட்டத் தொடரை பகிஷ்கரிக்கும்படியும் கோரிக்கை விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

"எவரது நெருக்குதல்களுக்கும் இந்தியா அடி-பணியாது - சோவியத் யூனியனுடன் இறுக்கமான உறவு தொடரும் - ஈழத் தமிழர் பிரச்சினையில் அன்னையின் கொள்கைகள் தொடரும்" - ராஜீவ் காந்தி



"எனது தாயார் படுகொலை செய்யப்பட்டது இந்தியாவைப் பிளவுபடுத்துவதற்கான சூழ்ச்சியின் ஓர் அம்சமே. பெயர் குறிப்பிடாத சிலசக்திகள் இப்படுகொலையை இந்தியாவின் ஒருமைப்பாட்டைச் சீர்குலைப்பதற்கான திட்டங்களையும் உள்நாட்டுப் பிளவுகளையும் தோற்றுவிப்பதற்கு ஒரு கருவியாகப் பயன்படுத்த எத்தனித்தன..." என புது டெல்லியில் பல இலட்சம் மக்கள் முன்னிலையில் இடம்பெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி "இக்கொலைக்காக நாம் பழிவாங்குவோம். அது கோபத்தின் மேலோ ஆத்திரத்தின் மேலோ அல்ல நாம் அனைத்து வேறுபாடுகளையும் கைவிட்டு எம் முழுச் சக்தியையும் பயன்படுத்தி ஐக்கியப்பாட்டையும் ஒருமைப்பாட்டையும் சீர்குலைக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராடுவதன் மேலே பழிவாங்குவோம்." என்றும் இந்தியாவின் அத்திவாரங்கள் அப்படி நொருங்கக் கூடியவையல்ல, எந்த நெருக்குதலுக்கும் இந்தியா அடிபணியாது என்றும் உறுதியிட்டுக் கூறியுள்ளார். இதே வேளையில் சோவியத் - இந்திய உறவு மேலும் நெருக்கமடையும் என அக்டோபர் புரட்சிக்கான வாழ்த்தை சோவியத் யூனியனுக்கு அனுப்பிய ராஜீவ் ஈழத் தமிழ் மக்களது பிரச்சினையில் மிகுந்த அனுதாபம் காட்டப்படும் இதுவரையிருந்த இந்திராவின் கொள்கை தொடரும் என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவில் கலவரங்கள் தணிந்தன!

## பொதுத் தேர்தல்கள் டிசம்பர் 24ம் திகதி.

இந்தியாவைத் துண்டாடுவதை நோக்காகக் கொண்டு ஏகாதிபத்தியச் சதியாளர்களால் நாடு முழுவதும் தூண்டி விடப்பட்ட கலவரங்கள் இந்திய அரசினால் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டன. இது இந்தியாவின் உறுதிப்பாட்டிற்கும் புதிய பிரதமர் ராஜீவ் காந்தியின் கையாளுகைக்கும் கிடைத்த வெற்றியாகக் கருதப்படுகிறது. இதையடுத்து இந்தியப் பிரதமர் இந்தியப் பாராளுமன்றத்தைக் கலைத்து எதிர்வரும் டிசம்பர் 24ம் திகதி தேர்தல்கள் நடைபெறும் என அறிவித்துள்ளார். அசாம், பஞ்சாப் ஆகிய மாநிலங்கள் தவிர்ந்த இதர மாநிலங்களில் நடைபெறும் இத்தேர்தலில் இம்முறை 36 கோடி வாக்காளர்கள் பங்கு கொள்கிறார்கள். 46 கட்சிகள் போட்டியிடத் தகுதி பெற்றுள்ளன. தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தலும் சேர்ந்தே நடைபெறுகிறது. தமிழகத்தில் இத்தேர்தல்களில் இந்திரா காங்கிரஸ் ஆனது அ.தி.மு.க வுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது.

பாகிஸ்தான்

## இந்தியாவுக்கு எதிரான ஆத்திரமூட்டலில் தொடர்ந்து பாகிஸ்தான்.

இந்தியாவுக்கெதிரான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக பாகிஸ்தானின் ஏகாதிபத்தியக் கைக்கூலியரசு ஈடுபட்டுவருகிறது. இந்தியாவுக்கெதிரான தாக்குதல்களும் கண்டனப் பிரச்சாரங்களும் பாகிஸ்தானின் பத்திரிகைகளில் தினமும் பிரசுரிக்கப்படுகின்றன. இந்திய-பாக் எல்லைப் பகுதியில் ஏராளமான பாக்கிஸ்தான் படைகள் குவிக்கப்பட்டும் உள்ளன. அதே வேளையில் வெளிநாடுகளில் வசிக்கும் சீக்கியர்களால் பாகிஸ்தானில் இந்திய விரோத மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. அத்துடன் பாகிஸ்தான் தொடர்ந்து சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களையும் பயிற்சிகளையும் வழங்கிவருவதாகச் இந்திய வட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூட்டுச் சேராமை என்பது தேசிய விடுதலை மற்றும் சுதந்திரமாகும். "இந்திரா"

இந்திரா - இந்தியாவின் எல்லைகளைக் கடந்து நெருக்கடி மிக்க இன்றைய காலகட்டத்தில் மூன்றாவது உலக நாடுகளுக்கு தலைமை தாங்கும் தகுதி படைத்த ஒரே தலைவி.

இந்திரா - ஒடுக்கப்படும் மக்களின் உற்ற துணை. தேச விடுதலை இயக்கங்களின் உந்து சக்தி.

இந்திரா - ஏகாதிபத்தியத்தின் முதல் எதிரி. கூட்டுச்சேரா நாடுகளின் அமைப்பின் மூலம் ஏகாதிபத்தியத்திற்கெதிரான பேரணியை அமைத்த அற்புதத் தலைவி.

கூட்டுச்சேரா நாடுகள் அமைப்பை ஏகாதிபத்தியத்திற்கெதிரான சாட்டையாக மாற்றி இவ்வமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்று புதுடில்லியில் நடைபெற்ற கூட்டுச்சேரா நாடுகளின் 7-வது உச்சி மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் 7.03.1983 அன்று பாரதத் தலைவி இந்திரா நிகழ்த்திய வரலாற்றுச் சிறப்புரை இந்திராவின் ஏகாதிபத்திய எதிர்ப்பு... சுதந்திர சார்பு... சோசலிச உணர்வு... தொழில் நுட்ப சிந்தனையுணர்வு உட்பட பல சிறந்த நெஞ்சங்களை எடுத்துக் காட்டும் ஓர் அற்புத உரையாகும்.

உலக மக்களிடையே திருமதி இந்திரா காந்தி விதைத்த ஏகாதிபத்திய எதிர்ப்பு விதைகள் இன்று ஏகாதிபத்தியத்தை தீயாய் சுட்டுப் பொசுக்கத் தொடங்கி விட்டன. இந்திராவின் அந்த வரலாற்றுச் சிறப்புரையின் சிலபகுதிகளையும் இந்திராவின் நெஞ்சங்களையும் நோக்குவோம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திராவின் ஏகாதிபத்திய எதிர்ப்புத் தன்மை...

"....35 ஆண்டுகளுக்கு முன்புதான், நம்மில் பல நாடுகள் அந்நிய ஆட்சியின் கீழ் அடிமை நாடுகளாக இருந்தன. தங்களின் சொந்த விவகாரங்கள் குறித்து ஒன்றும் சொல்ல முடியாதவைகளாக இருந்தன. காலனி ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பிறகு கூட்டுச் சேராமை தோன்றியது. ஏகாதிபத்திய எதிர்ப்பு நமது கண்ணோட்டத்தை இன்றும் வரையறுக்கிறது. நமது மதிப்பீடு மற்றும் செயல் சுதந்திரத்தின் மீது எந்த ஒரு நிழலும் படியும் அபாயத்திற்கு இடம் கொடுக்க மாட்டோம்...."

## இந்திரா சுரண்டலை வன்மையாகச் சாடுபவர்....

"....மேலும் மேலும் பல நாடுகள் விடுதலை அடைய அடைய, சமாதான சகவாழ்வில் நம்பிக்கையுடைய மற்றும் இராணுவக் கூட்டிலிருந்து ஒதுங்கி நிற்க விரும்பிய நாடுகளின் எண்ணிக்கை ஸ்திரமாக அதிகரித்தது. இந்தக் கூட்டுச் சேரா நாடுகள் ஒன்று சேர விழைந்தது இயற்கையே. இவைகள் ஒன்று சேர விழைந்தது மற்றொரு கூட்டணியை அமைக்க அல்ல, ஒரு தார்மீக அரசியல் இயக்கத்தின் மூலம் சுரண்டலுக்கு உள்ளான லெட்சோப லெட்சம் மக்களின் குரலை எழுப்புவதற்கேதான்...."

## கூட்டுச் சேராமை பற்றிய உண்மையான... உறுதியான... தெளிவான இந்திராவின் கருத்து....

"....சரி, தவறு பற்றி இதர அரசாங்கங்களுக்கு முரண்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். கூட்டுச் சேராது நாம் தேர்ந்தெடுப்பது சமாதானம். இது நிச்சயமாக சரியான, தவிர்க்க முடியாத தேர்வாகும். இனவெறிகொண்ட அல்லது மற்றவர்கள் கஷ்டப்பட்டுப் பெற்றெடுத்த சுதந்திரத்தை அச்சுறுத்துகின்ற அரசாங்கங்களைத் தவிர, மற்ற எல்லா அரசாங்கங்களுடனும் நட்பு கொள்ள நாம் தொடர்ந்து நாட்டம் கொள்கிறோம். கூட்டுச் சேராமை என்பது தெளிவற்றதல்ல, எதிர்நிலையானதுமல்ல, நடுநிலையுமல்ல ...."

"...கூட்டுச் சேராமை என்பது தேசிய விடுதலை மற்றும் சுதந்திரமாகும். இது, சமாதானத்திற்காக நிற்கிறது. முரண்பாட்டைத் தவிர்க்கிறது. இராணுவக் கூட்டுக்களிலிருந்து விலகி நிற்பது அதன் நோக்கம். நாடுகளிடையே சமத்துவம், சர்வதேச உறவுகள் பொருளாதாரம், அரசியல் ஆகியவற்றை ஜனநாயகப்படுத்துவது என்று இதன் அர்த்தம்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரா என்றுமே யுத்தத்திற்கு எதிரானவர்....
## பொருளாதார நெருக்கடி பற்றி தீர்க்கமாக சிந்திப்பவர்...

"....அணு ஆயுத யுத்தத்தின் மேலான பெரு அழிவு, உலக பொருளாதார அமைப்பு முறையின் நாசம் ஆகியவற்றின் விளிம்பின் மீது மனித குலம் ஆபத்தாக கொண்டிருக்கிறது. இந்தத் துயர சம்பவங்கள் நடந்தால் நம்மில் பெரிய, சிறிய பணக்கார அல்லது ஏழை, வடக்கு அல்லது தெற்கு, மேற்கு அல்லது கிழக்கு ஆக எவராவது தப்ப முடியும் என்ற நம்பிக்கை உண்டா? பொருளாதார நெருக்கடியை நாம் ஆராய்வோம். வளர்ந்து வரும் உலகமான நமக்குப் பாதுகாப்புக்கே இடமில்லை. எந்தவிதமான பொருளாதார நிலை குலைவு ஏற்பட்டாலும் நாம்தான் முதலாவதாகவும் மோசமானதாகவும் பாதிக்கப்படுபவர்கள். ஒருவரை ஒருவர் சார்ந்து நிற்க வேண்டிய இந்த உலகத்தில், விண்ணிலுள்ள 'ஒரு நட்சத்திரத்தை தொந்தரவு செய்யாமல் பூமியில் உள்ள ஒரு மலரைக் கூட அசைக்க முடியாது' என்ற அளவு சார்பு நிலை உருவாகியுள்ளது. மிகவும் செல்வந்த நாடுகள் கூட அத்தகைய தொந்தரவுகளிலிருந்து தப்பித்து விட முடியாது...."

## இந்திரா அணு ஆயுதப் போரை வன்மையாகச் சாடுபவர்....

"....வளர்ச்சி, சுதந்திரம், ஆயுதப் பரிகரணம், சமாதானம் ஆகியவை நெருக்கமான சம்பந்தமுடையவை. அணு ஆயுதங்களோடு கூட சமாதானம் இருக்க முடியுமா? சமாதானம் இல்லாவிட்டால், நமது வளர்ச்சி பற்றிய கனவுகள் அழிந்தும் சாம்பராக்கப்பட்டுவிடும். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணியும் அணு ஆயுதங்களின் அழிக்கும் சக்தியும் அளவும் அதிகரிக்கின்றன. உலகம் இதுவரை இந்த அளவு மரணத்தையும் அபாயத்தையும் கண்டதில்லை. அணு ஆயுதக் கையிருப்பில் பெருகிக் கிடக்கும் அழிவு சக்தி மனித உயிர்களை மட்டுமல்லாது அனைத்து உயிரினங்களையும் பலமடங்கிற்கு மேலாகக் கொல்லும். காலா காலத்திற்கு உயிரினத் தோற்றத்தையே தடுத்துவிடும் வல்லமை படைத்தது. அதிகார நாட்டமும் மற்றும் மேலாதிக்க விருப்புமே ஆயுதப் போட்டி தொடர்வதற்கான காரணமாகும். ஏற்றுக் கொள்ள முடியாத கோட்பாடுகளை வல்லரசுகள் பிரச்சாரம் செய்கின்றன. புதிய ராணுவத் தளங்களும் வசதிகளும் உருவாக்கப்படுகின்றன. அதனால் தான் நமது பொறுப்பு உறுதியானதாகவும் துரிதமானதாகவும் உண்மையானதாகவும் இருக்க வேண்டும்..."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இந்திரா ஆதிக்கத்திற்கு... ஆக்கிரமிப்புக்கு என்றும் எதிரானவர்....**

"....சகவாழ்விலும் மட்டுமே எந்த வாழ்வும் இருக்க முடியும். நாம் குறுக்கீடு செய்யாமலிருப்பதையும் தலையீடு செய்யாமலிருப்பதையும் சர்வதேச நடத்தையின் அடிப்படை விதிகளாகக் கருதுகிறோம். இருப்பினும் இலத்தீன் அமெரிக்காவில் ஆபிரிக்காவில், ஆசியாவில் பகிரங்கமாக அல்லது இரகசியமாக பல்வேறு வகையான தலையீடுகள் நடந்து வருகின்றன. அவைகள் சகிக்க முடியாதவை, ஒப்புக் கொள்ள முடியாதவை, குறுக்கீடு தலையீட்டுக்கு வழிவகுக்கிறது. ஒரு தலையீடு மற்றொரு தலையீட்டை ஈர்க்கிறது. ஒரு தனி அரசுக்கு அல்லது அரசுகளின் குழுக்களோ அவ்வாறு குறுக்கிடவோ அல்லது தலையிடவோ நியாயமோ அல்லது தார்மீக அதிகாரமோ இல்லை...."

**இந்திரா ஒடுக்கப்படும் மக்களுக்கு உற்ற துணையானவர்... உந்து சக்தியானவர்....**

"....வீரமிக்க, விடற்ற, மிகவும் அலைக்கழிப்புக்கு ஆளான பாலஸ்தீன மக்களுக்கு நாம் அளிக்கும் ஆதரவில் நாம் அனைவரும் ஒரே மனத்தினராய் இருக்கிறோம். எந்த விதமான மான பலத்தையும் செய்ய தடை ஏதும் இல்லை என்றும், தனது ஆக்கிரமிப்பில் அக்கறை தேவையில்லை என்றும், சர்வதேச விதி மற்றும் நடத்தையில் தனது அத்துமீறல் பற்றி விசாரிக்கப்பட வேண்டியதில்லை என்றும் இஸ்ரேல் கருதுகிறது. இப் பாலஸ்தீனர்களின் சட்டபூர்வமான உரிமைகளை என்றுமே தடுத்துவர முடியுமா? சட்டத்தை மீறும் மற்றொரு வேண்டாக்கெட்ட ஆட்சி தென்னாபிரிக்க ஆட்சி. அது முழுப்பாதுகாப்புடன் சர்வதேசக் குடும்பத்தை எதிர்த்து வருகிறது. மனித இனத்தின் ஒற்றுமையை அழித்து, இனவெறியை அமைப்பு முறையாக்கிய பிரிட்டோரியா அரசாங்கம் இன்னும் செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாம் சரியாகக் கவனிக்க வேண்டும். தனது சொந்த மக்களுக்கும் நமீபியா மற்றும் இதர அண்டை நாடுகளுக்கும் எதிரான ஆக்கிரமிப்பு ஓர் அவமரியாதையாகும். இந்து மாகடல் பெரும்பாலாக இராணுவமயமாக்கப்படுவதையும் தியகோகார்சியா தளத்தை அணு ஆயுத தளமாக மாற்றுவதையும் எதிர்ப்பது நாம் ஒத்த நிலைப்பாடு கொண்டுள்ள இன்னுமொரு பிரச்சனையாகும்...."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிக்கரகுவாவின் மக்கள் புரட்சியை பாதுகாப்போம்.



# ஏகாதிபத்திய வெறிநாயை விரட்டியடிப்போம்.



வெளியீடு: தமிழ் ஈழ விடுதலைப் பேரவை

பிரான்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org